## வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனி – 2016

வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனியின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. இக்கணக்காய்வை நடாத்துவதற்கு பிரசித்த தொழிற்துறையைச் சார்ந்த பட்டயக் கணக்கறிஞர் கம்பனி ஒன்று எனக்கு உதவி வழங்கியது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் மீளாய்வாண்டினது கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புரைகள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப நடாத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

(அ) தகவல்களைச் சரிவர இனங்காணாது 2011 சனவரி 20 ஆந் திகதியன்று கொழும்பு தொழிற்சாலையில் பொருத்துவதற்கென வாடகைக் கொள்வனவு அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 104,177,779 பெறுமதியான யோகட் கலவை செய்யும் இயந்திரம் ஒன்று 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி பொலன்னறுவை தொழிற்சாலையில் பொருத்தப்பட்டிருந்ததுடன், இந்த இயந்திரத்திலும் பொறித் தொகுதியிலும் நிலவிய தொழில்நுட்ப வழுவின் காரணமாக அது கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதலாக கணக்காய்வுத் தினமான 2017 யூலை வரை பயன்படுத்த முடியாதிருந்தது. அதன் காரணமாக, இந்த இயந்திரத்தினதும் பொதித் தொகுதியினதும் பெறுமதியின் பொருட்டு இழப்பீட்டு நட்டச் சீராக்கல் செய்யப்பட வேண்டுமாயினும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) தொழிற்சாலையை நவீனமயப்படுத்துவதற்கு பொதுத் திறைசேரியிலிருந்து பெற்ற கடன் சம்பந்தமாக ஏற்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் குறித்த காலப்பகுதியினுள் கடனைக் கொடுப்பனவு செய்வது புறக்கணிக்கப்பட்டமையால் திறைசேரிக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய 2 சதவீத புறக்கணிக்கப்பட்ட வட்டி சம்பந்தமாக கம்பனியின் கணக்குகளில் நிதியேற்பாடு செய்யப்படவில்லை. அதற்கமைய, நிதி நிலைமைக்கூற்றில் காணப்படும் பொறுப்புகள் ரூபா 117 மில்லியன் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கம்பனியின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மேற்படி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்கு ரூபா 6,189,574,828 மற்றும் படல்கம தொழிற்சாலையில் பால் தயாரிப்பு இயந்திரத்தை நிறுவுவதற்கு ரூபா 4,831,791,167 எனச் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், அதன் மூலம் அதிகரித்துக் கொண்ட ஆற்றலால் போதியளவு பால் வழங்குதல் இல்லாதிருந்ததாக தற்போதைய முகாமைத்துவ அறிக்கை மற்றும் முகாமைத்துவ விசாரணைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, இலங்கை கணக்கீட்டு நியமம் 36 க்கமைய குறித்த சொத்து இழப்பீட்டிற்கான சீராக்கல் செய்யப்படவில்லை.

(ஈ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மேற்குறித்த தொழிற்சாலை நவீனமயப்படுத்தலின் கீழ் 3 தொழிற்சாலைகளுக்கும் படல்கம புதிய தொழிற்சாலைக்கும் நிதி அமைச்சால் வழங்கப்பட்ட கடன் ரூபா 13,212,970,600 ஆகியபோதும், நிதி அமைச்சினது வெப் தளத்தினூடாகப் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 10,859,986,560 ஆகும். இதனால் அவதானிக்கப்பட்ட வித்தியாசம் ரூபா 2,304,813,243 ஆகும். இவ்வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. நிதிக்கூற்றுக்களில் காணப்படும் பெறுமதியை உறுதி செய்வதற்கான ஆவணச் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) பொருட் பட்டோலைப் பதிவேட்டில் உள்ளடங்கிய ரூபா 30,890,878 பெறுமதியான அசைவற்ற பொருட்களும் ரூபா 35,557,148 பெறுமதியான மெதுவாக நகரும் பொருட்களும் தொடர்பான இழப்பீட்டுச் சீராக்கல் அல்லது நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. ஏனைய பொருட் பட்டோலைப் பொருட்களுக்கு ரூபா 11,352,785 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டபோதும், அக் கணிப்பீடு சரியானவையா என்பதை உறுதி செய்வதற்கான விரிவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் கணக்கீட்டு விடயங்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

| **கணக்கீட்டு விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** |
|---|---|---|
| | **ரூபா** | |
| நிலையான சொத்துக்கள் | 1,460,028,918 | நேரடி சரி, பிழை பார்த்தல் அறிக்கை |
| பசுக்களின் உணவு | 7,856,860 | விரிவான பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு |
| முற்பணம் | 16,114,541 | |
| இடர்க் கடன் (முகாமைத்துவம் அல்லாத) | 41,076,727 | |
| இடர்க் கடன் (முகாமைத்துவம்) | 21,377,987 | |
| சேர்ந்து நின்ற செலவினம் | 4,207,457 | மீதியை தீர்வு செய்தமைக்கான சான்று |
| ஏனைய கடன் கொடுத்தோர் | 12,005,844 | |
| நடைபெறும் மூலதன வேலை | 21,895,870 | தெரிவுச் செவ்வைக்குள்ளான செலவினத்தை சரி, பிழை பார்ப்பதற்கான எழுத்து மூல சான்று |
| கடன் பட்டோர் | 394,798,089 | மீதிகளை உறுதிப்படுத்தல் |
| விலங்கின வள அபிவிருத்தி | 6,616,885 | |
| அமைச்சிலிருந்து பெற வேண்டிய மீதி | 94,333 | |
| பாராளுமன்ற நடவடிக்கைகள் அமைச்சிலிருந்து பெற வேண்டிய மீதி | --- | |
| மொத்தம் | 1,986,073,511 | |
| | ======== | |

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராய மறுப்பு

இந்த அறிக்கையின் அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படைக்கான பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதிய மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு என்னால் இயலாது போனது. அதன் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்கவில்லை.

### 2.1.1 ஏனைய சட்டபூர்வ அல்லது ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) பிரிவின் மூலம் பணிக்கப்பட்டவாறு பின்வரும் விடயங்களை நான் சுட்டிக்காட்டுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை, நோக்கெல்லை மற்றும் கணக்காய்வின் வரம்பு மேலே குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஆ) இவ்வறிக்கையினது அபிப்பிராயம் சம்பந்தமான அடிப்படைக்கான பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்குப் போதுமானதும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு என்னால் இயலாது போனது. அதன் விளைவாக இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை நான் வழங்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் நிதிப் பெறுபேறு ரூபா 327,084,631 மிகை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,299,511 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 339,384,142 அபிவிருத்தியை அடைந்துள்ளது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மொத்த இலாபம் ரூபா 282,835,367 அதிகரித்தமையும் நிர்வாகச் செலவினம் ரூபா 83,913,542 குறைவடைந்தமையும் மேற்படி அபிவிருத்திக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்விற்குரிய 04 ஆண்டுகளது நிதிக்கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்கையில், 2013 ஆம் ஆண்டின் ரூபா 267,468,281 பற்றாக்குறையானது 2014 தொடக்கம் துரித அதிகரிப்புடன் மீளாய்வாண்டளவில் ரூபா 327,084,631 மிகை வரை அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் ஊழியர்களது ஊதியமும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானமும் மீண்டும் சீராக்கல் செய்யப்படும்போது 2013 ஆம் ஆண்டின் கம்பனியினது ரூபா 773,035,900 பங்களிப்பானது மீளாய்வாண்டின்போது ரூபா 1,507,168,721 வரை தொடர் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

## 3.2 பகுப்பாய்வுடனான மீளாய்வு

தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் மற்றும் படல்கம செயற்திட்டத்திற்கும் பெறப்பட்ட கடன் என்பவற்றால் கம்பனியில் அதிக மாறுபடும் நிலைமை ஏற்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தில் (வியாபார திட்டம்) உள்ளடக்கப்பட வேண்டிய, தற்போது நிறுவனத்திடம் உள்ள உற்பத்திகள் மற்றும் செயற்பாட்டு வசதிகள், முகாமைத்துவத் திறன் தொழில்நுட்ப அறிவு, வர்த்தகச் சந்தை, வழங்குநர், ஸ்தாபன வியூகம், திட்டமிட்ட கால வரம்புக்குள் நிறைவேற்றப்படக்கூடிய இலக்குகள் மற்றும் நோக்குகள் சம்பந்தமாக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கிய முகாமைத்துவப் பொறுப்பு போன்ற விடயங்கள் 2015-2017 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) வருடாந்தப் பாதீட்டில் மீளாய்வாண்டிற்கான முலதனச் செலவினம் மாத்திரமே பாதீடு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்பாட்டுச் செலவினம் உள்ளடக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது கம்பனியானது மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு மற்றும் மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தல் என்பவற்றிற்கு முறையே ரூபா 514.61 மில்லியன் மற்றும் ரூபா 140.75 மில்லியன் எனப் பாதீட்டில் நிதியேற்பாடு செய்திருந்தபோதும், அதற்கான வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரிக்கவில்லை.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

மத்திய வங்கியினது அறிக்கைகளின் பிரகாரம் 2014 முதல் 2016 வரை நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும், அரசாங்கத்தின் கீழ் பால் சேகரிப்பில் ஈடுபட்ட மில்கோ கம்பனியின் பால் சேகரிப்பு 2014 தொடக்கம் பால் உற்பத்தியின் 22.51 சதவீதம் ஆகவிருந்து 2016 ஆம் ஆண்டின்போது 22.04 சதவீதம் ஆகியிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.3 மற்றும் 4.2.6 என்பவற்றின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையைத் தயாரித்து காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த அறிக்கை என அவற்றைச் சமர்ப்பித்திராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கையிருப்புக்குப் போதிய காப்புறுதி பெறப்படவில்லை.

(இ) பொலன்னறுவை பால் தொழிற்சாலைக்கு 8-10 ஆண்டுகளுக்கு முன்னர் நெஸ்லே கம்பனியிடமிருந்து கிடைக்கப்பெற்ற பொறியியல் கையிருப்புப் பொருட்களை பெறுமதியிட்டு பொலன்னறுவை பால் தொழிற்சாலையினது புத்தகங்களில் அவற்றைப் பதிவு செய்திராததுடன், கம்பனியின் சொத்துக்கள் அதேயளவு பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டுமிருந்தன.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) தொழிற்சாலையை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம்

(i) இலங்கையில் பாலின் நுகர்வை அதிகரிக்கும் கொள்கைப்படி ஒப்பந்த நிறுவனத்தின் மூலமாக நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு வழங்கப்படும் ஆலோசனைப் பிரகாரம் 4 தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல், 80 பால் சேகரிப்பு நிலையங்களைப் பழுதுபார்த்தல், 20 புதிய நிலையங்களை நிர்மாணித்தல் செயற்திட்டம் என்பவற்றை அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப பகுப்பாய்வுக்குழு பகுப்பாய்வு செய்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 2009 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று 39.1 மில்லியன் யூரோவிற்கான உடன்படிக்கை கம்பனிக்கும் வெளிநாட்டு நிறுவனத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்டது. எனினும், 2011 யூன் 24 ஆந் திகதியன்று கம்பனியின் தலைவர் அந்நிறுவனத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பி 2.37 மில்லியன் யூரோ நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த 80 பால் சேகரிப்பு நிலையங்களது பழுதுபார்த்தல் மற்றும் 20 பால் சேகரிப்பு நிலைய நிர்மாண வேலைக்கான கிரயம் உள்ளடங்கலாக பல பணிகளது கிரயத்தை நீக்கி, பொலன்னறுவை, திகன, அம்பேவெல தொழிற்சாலைகளது நவீனமயப்படுத்தலுக்கு யூரோ 33.78 மில்லியனுக்கான புதிய முன்மொழிதலைச் சமர்ப்பித்து, மீண்டும் 2012 சனவரி 12 ஆந் திகதியன்று உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டது.

இயந்திரத்தின் ஆற்றல் முழு அளவில் நடைபெறுவதாகக் கற்பனை செய்து தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு முதலாவது செயற்திட்டத்தை பகுப்பாய்வு செய்திருந்ததுடன், 2012 சனவரி 12ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட உடன்படிக்கையின் மூலம் பால் சேகரிப்பு நிலையங்களை அகற்றுதல் மற்றும் மாற்றீடு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக பால் உற்பத்தி விரயமாகியிருந்தது.

(ii) மேற்படி புதிய முன்மொழிதல்களுக்கமைய பொலன்னறுவை, திகன, அம்பேவெல ஆகிய தொழிற்சாலை நவீனமயப்படுத்தலுக்கு கேள்விகள் கோரப்படாது நிறைவேற்றப்பட்டு ஒப்படைக்கப்படும் முறைப்படி (Turnkey) தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு ஒப்பந்த நிறுவனம் மற்றும் மில்கோ பிரத்தியேக கம்பனி என்பவற்றுக்கிடையே ஏற்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் செயற்திட்டத்தின் ஒப்பந்த காலம் 2014 யூலை 12 ஆந் திகதி முடிவடைய வேண்டும். எனினும், திகன, அம்பேவெல பால் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தும் நடவடிக்கை 2017 யூலை 31 வரை முடிவடையாதிருந்ததுடன், இரு சாராரில் எவரேனும் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு அல்லது சபையால் தாமதக் கட்டணமாக இணக்கம் காட்டப்பட்டுள்ள தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2017 யூலை மாதமளவில் உடன்படிக்கை 36 மாதங்களுக்கு மேற்பட்ட தாமதத்திற்குள்ளாகி தாமதக் கட்டணமாக

1,688,961 யூரோ அறவிடப்பட வேண்டியிருந்தபோதும், அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(iii) தொழிற்சாலையை நவீனமயப்படுத்துவதற்காக கம்பனி வெளிநாட்டுக் கம்பனி ஒன்றுடன் 2012 ஆம் ஆண்டில் செய்து கொண்ட உடன்படிக்கைப் பிரகாரம் HSBC வங்கிக்கும் திறைசேரியின் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கும் இடையேயும், அதேபோன்று,வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கும் கம்பனிக்கும் இடையேயும் 2013 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின்படி, கடனில் 28,712,328 யூரோ பங்குக்கு 2 சதவீத வட்டிக்கும் எஞ்சிய 5,066,881 யூரோக்களுக்கு 6 சதவீத வட்டிக்கும் லண்டன் உள்ளக வங்கிக் கடன் விகிதத்தைச் சேர்த்து வணிகமய வட்டி வீதத்தைச் செலுத்துவதற்கு இணக்கம் ஏற்பட்டிருந்தது. அதற்கமைய, வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கும் சபைக்குமிடையே அதே வட்டி வீதத்திலேயே உப கடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கடனுக்கான வட்டியாக கம்பனி திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 3,554,761,168 ஆகும். அதற்கமைய, குறித்த உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகளைச் சபை மேற்கொண்டிராமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) படல்கம செயற்திட்டம்**

---

விலங்கின வள மற்றும் கிராமிய அமைச்சினது செயலாளரின் 2013 நவம்பர் 25 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், கம்பனிக்குரிய நாராஹேன்பிட தொழிற்சாலையை படல்கமவுக்குக் கொண்டு செல்லும் செயற்திட்டத்திற்கு 2013 யூன் 05 ஆந் திகதிய அமைச்சினது பகுப்பாயவுக் குழு 2 வெளிநாட்டு நிறுவனங்களைப் பகுப்பாய்வு செய்து சாதகமான நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், கம்பனியின் தலைவரது மதியுரையின்படி மதிப்பாய்வுக்குழு பரிந்துரை செய்த நிறுவனத்திற்குப் பதிலாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஏனைய நிறுவனங்களிடம் வேலையைப் பூர்த்தி செய்து ஒப்படைக்கும் அடிப்படையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2015 ஏப்ரல ˙23 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருந்தது. 2015 மே 19 ஆந் திகதியன்று அது தொடர்பான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டது. கடனில் ஒரு பகுதிக்கு 1.90 சதவீதம் வட்டியும் எஞ்சியவற்றிற்கு 5 சதவீத வட்டியும் வழங்கப்படுவதுடன் லண்டன் உள்ளக வங்கி கடன் வட்டி வீதத்தையும் அதனுடன் சேர்த்து வணிகமய வட்டி வீதத்தில் பெறப்பட்ட கடன் ரூபா 9,932,709,286 ஆகும். இதன் மூலம் இச்செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 யூன் 05 ஆந் திகதிய அமைச்சரவை பகுப்பாய்வுக் குழு பரிந்துரைத்த நிறுவனம் சமர்ப்பித்திருந்த கேள்வியிலும் கூடுதலாக 10 மில்லியன் யூரோ (ரூபா 1750 மில்லியன்) அதிகரிப்புடன் கேள்வியைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) மேற்படி செயற்திட்டம் தொடர்பாக 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட குழுவினது அறிக்கையின் பிரகாரம் கட்டிட மற்றும் ஏனைய நிர்மாண வேலைக்கான துணைப்பாகங்களினதும் மொத்தப் பெறுமதி 4,000,000 யூரோ (ரூபா 596,952,800) ஆகும். அதாவது, மதிப்பிடப்பட்ட நியாயமான விலையிலும் கூடியதாக இது அமைந்ததுடன், மில்கோ நிறுவனத்தினது நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட நாளாந்தப் பாலின் அளவு 650,000 லீட்டர் வரம்பிற்குட்பட்டதாகும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

(iii) மில்கோ கம்பனி கடனைத் திருப்பிச் செலுத்தும் ஆற்றல் இல்லாதிருப்பதாகவும், கம்பனி காசுப் பாயச்சலில் நெருக்கடி நிலையில் உள்ளதாகவும் தொழிற்சாலையை நவீனமயப்படுத்த எண்ணியுள்ளதன் மூலம் பால் விநியோகம் நெருக்கடிக்குள்ளாகலாம் என்பதால் செயற்திட்டத்தை நிராகரிப்பதற்கு 2015 மார்ச் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்புக்கு 2015 மார்ச் 07 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. எனினும் குறித்த கடனை மூன்று ஆண்டு கால சலுகையுடன் மில்கோ கம்பனிக்கு மீள் கடனாக வழங்கலாம் எனும் இணக்கத்துடன் மீண்டும் 2015 ஏப்ரல் 08 ஆந் திகதியன்று அமைச்சரவைக் குறிப்பு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு 2015 ஏப்ரல் 23 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், மேற்படி செயற்திட்டத்திற்கு கம்பனிக்கும் பொதுத் திறைசேரிக்குமிடையே 2018 ஒக்டோபர் 19 வரை மீள் கடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 4.4 பதவியணி நிர்வாகம்

முகாமைத்துவச் சேவைச் சுற்றறிக்கை இலக்கம் 30 க்கமைய பதவியணிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்து 2018 ஒக்டோபர் 25 வரை அங்கீகரிக்கப்படாதிருந்தது. 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் பதவியணி நிலைமை பின்வருமாறு.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | பதவியணி மிகை / (வெற்றிடம்) |
|---|---|---|---|
| நிறைவேற்று தரம் | 12 | 57 | 45 |
| மூன்றாம் நிலை | 179 | 150 | (29) |
| இரண்டாம் நிலை | 802 | 468 | (334) |
| ஆரம்ப நிலை | 427 | 779 | 352 |
| பயிற்சி மற்றும் ஏனையவை | - | 17 | 17 |
| மொத்தம் | 1420 | 1471 | 51 |

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வவ்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்பு |
|---|---|
| (அ) திட்டமிடல் | அரசாங்கம் எதிர்நோக்கும் நோக்கத்தையும் இலக்கையும் அடைவதற்குத் தேவையான கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம், பாதீடு, செயலாற்றல் அறிக்கைகள் என்பன போதிய தகவல்களை உள்ளடக்கியவாறு தயாரிக்கப்படவில்லை. |
| (ஆ) கையிருப்பு முகாமைத்துவம் | கையிருப்பைக் கிரயமாக களஞ்சியப்படுத்தாமையால் அழிவு ஏற்பட்டமை, காலாதியாகிய கையிருப்பைக் கணிப்பது முறையற்றவாறு இருந்தமை. |